23rd July 1964]

வில்லை. குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்துக் கொண்ட தந்தையர்கள் இவ்வாறு மீண்டும் அறுவை செய்து கொள்வதற்கு முன் வராததே இதற்குக் காரணம்.

திரு. மா. இராசாங்கம்: குடும்பக் கட்டுப்பாடு ஆபரேஷன் செய்வதினால் "இம்போடன்ட்" ஆகிவிடுகிறார்கள் என்ற பீதி மக்களிடம் பரவலாக இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அதற்குத்தான் நான் இப்பொழுது பதிலளித்தேன்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, இருபது நாட்களுக்கு முன் சேலம் தலைமை மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்துக் கொண்டவர் உடனடியாக இறந்துவிட்டார் என்ற செய்தி அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி அவர் இறந்த தற்குக் காரணம் என்ன என்று சொல்ல முடியுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், நான் பத்திரிகை யில் அதைப் பார்த்தேன். அறுவை சிகிச்சையால் இறந்தாரா அல்லது வேறு காரணத்தினாலா என்பதுபற்றி தகவல் என்னிடம் இல்லை.

Small-pox.

* 643 Q.—PULAVAR K. GOVINDAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that small-pox is prevalent in an epidemic from on a large scale in Cheyyar taluk, North Arcot district and whether in one village of UKKAM Perumpakkam alone, there were as many as eight deaths, during the month; and

(*b*) if so, the particulars thereof and the action taken by the Government in this regard?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) செய்யாறு வட்டத் தில் பெரியம்மை கொள்ளை நோயாகப் பரவவில்லை. ஆனாலும், உக்கம்பெரும்பாக்கம் கிராமத்தில் சிலருக்குப் பெரியம்மை கண்டது.

(இ) பெரியம்மை பத்து பேருக்குக் கண்டது. அதில் ஐந்து பேர் இறந்துவிட்டதாகத் தெரியவருகிறது. இந்நோயினை கட்டுப்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, பெரியம்மையால் இறந்துபோவது போலவே, அதைத் தடைசெய்வதற்கு என்று வாக்சினேஷன் செய்து கொண்டவர்களும் இறந்துவிட்டார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

கனம் திருமதி. ஜோதி வெங்கடாசலம்: அந்தத் தகவல் என்னிடம் வரவில்லை.